# மெட்ரோ டாக்சியில் 4 லட்சம் பேர் பயணம்

**சென்னை, ஜூலை 11–**

மெட்ரோ ரயில் நிலையங்களில், குறைந்த கட்டணத்தில் இயக்கப்படும் ஷேர் ஆட்டோ, டாக்சியில், 45 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில், பயணியர் வருகையை அதிகரிக்க, கிண்டி, திருமங்கலம், ஆலந்துார், சின்னமலை, ஈக்காடுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை நிலையங்களில், ஷேர் ஆட்டோ வசதி செய்யப்பட்டுள்ளது.

எழும்பூர், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்துார், வடபழனி நிலையங்களில், ஷேர் டாக்சி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இதில், 3 கி.மீ., செல்ல, ஷேர் ஆட்டோவுக்கு, 5 ரூபாயும், டாக்சிக்கு, 10 ரூபாயும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஆட்டோ, டாக்சிக்கு, பயணியரிடையே வரவேற்பு உள்ளதால், இவைகளில் ஜூன் மாதத்தில், 45 ஆயிரத்து, 824 பேர் பயணம் செய்தனர்.

இவ்வசதி, 2018 ஆக., 11ல் துவங்கப்பட்டதில் இருந்து, ஜூன், 30ம் தேதி வரை, 3.95 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.